**அம்பன்கங்கோரளை பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பன்கங்கோரள பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த 02 நீர் முன்மொழிவுத் திட்டங்கள் மற்றும் ரூபா 600,000 பெறுமதியான மயானம் மற்றும் பொது நூலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 327,504 பெறுமதியான தளபாடங்களும் பொருத்திகளும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 2 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 54,900 கூட்டுத்தொகையான தொலைத்தொடர்பு கோபுரக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டில் மூலதன நன்கொடைகள் ரூபா 105,918 ஆல் குறைவாகவும் மூலதனச் செலவினம் ரூபா 972,290 ஆல் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து நன்கொடையாகக் கிடைத்திருந்த டிரம்ப் வண்டியினதும் குரு கெப் வண்டியின் கிரயமும் கணக்கீடு செய்யப்படாமல் தனியார் வாகன விற்பனை நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டதாக முறையற்றதாக ரூபா 8,723,220 பெறுமதியானது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்**

கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,620,500 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாமல் காணப்படும் ரூபா 2,922,274 கூட்டுத்தொகையான மீதியொன்றும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) செலுத்த வேண்டிய 05 கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 4,431,647 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாமல் காணப்படும் ரூபா 1,897,749 கூட்டுத்தொகையான மீதியொன்றும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 813,670 ஆன பங்களிப்பு பணம் காணப்பட்டதுடன் 06 வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 626,974 ஆன மீதியொன்றும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

08 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 4,188,942 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமானதாக சான்றுறுதி முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

17 வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 272,984 தொகையான 12 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவு**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 532,059 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 303,652 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 835,711 ஆன அதிகரிப்பைக் காண்பித்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபைக்குச் சொந்தமான 07 நீர் செயற்திட்டங்களிலிருந்து 2015 திசெம்பர் 31 வரை பட்டியலிடப்பட்ட வருமானம் 829,395 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 266,350 ஆக இருந்தது. அதில் 2016 யூலை 10 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 81,161 ஆக இருந்ததுடன் நீர்ப் பட்டியல் கொடுப்பனவு செய்யப்படாததன் பேரில் துண்டிக்கப்பட்டிருந்த 33 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 40,525 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 ஏக்கர் வரி**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 56,628 நிலுவை மீதி காணப்பட்டது.

**2.2.3 வாடகை**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கடைகளுக்காக ரூபா 51,765 ஆன மீதியொன்று அறவிட வேண்டியிருந்தது. அதில் 2016 யூலை 10 ஆந் திகதி வரையிலும் மேலும் அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை மீதி ரூபா 13,980 ஆக இருந்தது.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 176,632 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 1,280,426 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன. அதில் 2016 யூலை 10 ஆந் திகதி வரையிலும் நீதிமன்றத் தண்டப் பணமாக மாத்திரம் மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 21,750 ஆக இருந்தது.

**2.3 மிகை அறவீடு**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 69,800 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 2016 யூலை 10 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 60,300 ஆக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல் மதிப்பீடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் நிர்மாணம், பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் உள்ள தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் மூலம் சிறிய நகரங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் மெட்டிஹக்க நகரில் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பொருளாதார நிலையம், உள்ளக நுழைவு வீதிகள், வாகனத் தரிப்பிட் நிர்மாணம், மெட்டிஹக்க விளையாட்டு மைதான அபிவிருத்தி மற்றும் முச்சகர வண்டி நிறுத்துமிட நிர்மாணம் போன்ற அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் 02 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து 2015 திசெம்பர் 14 ஆந் திகதி ரூபா 1,000,000 தொகை சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூலை வரையிலும் அச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட 12 பதவிகளில் 19 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றான வருமான பரிசோதகர்

பதவியொன்றும் வெற்றிடமாக காணப்பட்டமையால் வருமானம் சேகரிப்பு மிகவும் பலவீனமாக காணப்பட்டது. புதிய வருமான வழிகளுக்கு நுழைவதற்கும் காணப்படும் வருமானங்களை அறவிடுவது தொடர்பிலும் இந்நிலைமை தாக்கமளித்திருந்தது.

(ஆ) சபைக்கு இணைக்கப்பட்டிருந்த வீதித் தொழிலாளர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் அப்பதவிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படாததுடன் வெற்றிடங்கள் காணப்பட்டமை மற்றும் பதவிகள் அங்கீகரிக்கப்படாமையின் பேரில் நீர் பம்பிகளுக்குரிய சுகாதார தொழிலாளர்கள் இணைக்கப்படுவதற்கு நேர்ந்திருந்தது. இதன் காரணமாக வீதிகளை துப்பரவு செய்தல் நடவடிக்கைகள் வீதியின் இரு பக்கங்களை சுத்திகரித்தல் போன்ற சேவைகள் சபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபைக்குச் சொந்தமான 03 நீர் செயற்திட்டங்களின் கீழ் பொருத்தப்பட்டிருந்த 112 நீர்மானிகளுக்கான ரூபா 336,000 கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச சபைக்குரிய ஒழுக்காற்றுப் பரிசோதனையொன்றை மேற்கொண்டிருந்த உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தின் பிரதான புலனாய்வு உத்தியோகத்தரொருவருக்கு பரிசோதனையின் பிரயாணச் செலவினமாக ரூபா 24,407 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தரால் பரிசோதனைக்குரிய 2015 நவம்பர் 03 ஆந் திகதிக்காக 2015 நவம்பர் 30 ஆந் திகதி இரண்டு உறுதிச்சீட்டுக்களை சமர்ப்பித்து ரூபா 2,440 வீதம் இரண்டு தடவை பிரயாணச் செலவினமும் இணைந்த படிகளும் பெறப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே நிதிஏற்பாடுகள் மாற்றப்பட்டதன் பிரகாரம், பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே கருத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை 09 வருமான விடயங்களுக்குரிய ரூபா 347,500 மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் 07 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 43 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் விலகல் காணப்பட்டன.

(ஆ) 26 வருமான விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 835,160 தொகையான நிதிஏற்பாடுகளில் ஆண்டில் எவ்வித செலவினமொன்றும் இடம்பெறாமல் இருந்ததுடன், 25 செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாடு மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 32 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

சபைகளுக்கு சொந்தமாக காணப்பட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும் 03 வாகனங்கள் என்பன 01 வருடம் முதல் 4 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாமல் சபை வளவில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் காணப்பட்ட 04 வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு